## ஜனவரி – 30 – செவ்வாய்

**தூய பர்த்தில்திஸ் அரசி**

**“மகளே உனது நம்பிக்க உன்னைக் குணமாக்கிற்று அமைதியுடன் போ. நோய் நீங்கி நலமாயிரு” (மாற்.5:34)**

-----------------------------------------------------------------------

### முதல் வாசகம்:2சாமுவேல் 18:9–10,14,24 – 25,30--19:3

அப்சலோம் தாவீதின் பணியாளரை எதிர்கொள்ள நேர்ந்தது. அவன் ஒரு கோவேறு கழுதைமீது ஏறி வந்து கொண்டிருந்தான். அது ஒரு பெரிய கருவாலி மரத்தின் அடர்த்தியான கிளைகளுக்குக் கீழே சென்று கொண்டிருந்தது. அப்போது அவனது தலை கருவாலி மரத்தில் சிக்கிக் கொள்ள, அவன் விண்ணுக்கும் மண்ணுக்கும் இடையே தொங்கினான். அவன் ஏறிவந்த கோவேறு கழுதை முன்னே சென்றுவிட்டது. இதைக் கண்ட ஒருவீரன் யோவாபிடம் சென்று ”இதோ! அப்சலோம் கருவாலி மரத்தில் தொங்குவதைக் கண்டேன்” என்று கூறினான். ”உன்னோடு இவ்வாறு நான் நேரத்தை வீணாக்க மாட்டேன்” என்று சொல்லிவிட்டு யோவாபு தம் கையில் மூன்று ஈட்டிகளை எடுத்துச் சென்று உயிருடன் கருவாலி மரத்தில் தொங்கிக்கொண்டிருந்த அப்சலேமின் நெஞ்சில் அவற்றைப் பாய்ச்சினார். அப்போது தாவீது இரு வாயில்களுக்குமிடையே அமர்ந்துக்கொண்டிருந்தார். காவலன் மதிலின் வாயிலுக்கு மேல் ஏறிச்சென்று கண்களை ஏறெடுத்துப் பார்த்தான். ஓர் ஆள் தனியாக ஓடி வருவதைக் கண்டான். காவலன் குரலெழுப்பி அரசரிடம் கூற, அரசர், ”தனியாக வந்தால் அவனிடம் நற்செய்தியுள்ளது ”என்றார். அந்த ஆள் இன்னும் அருகில் வந்து ண்டிருந்தான். அரசர் அவனை நோக்கி, ”விலகி, அங்கே நில்” என்று கூற அவனும் விலகி நின்றான். அப்போது கூசியனும் வந்து, ”என் தலைவராம் அரசே! நற்செய்தி! இன்று ஆண்டவர் உமக்கு எதிராக எழுபவர்களின் கரத்தினின்று உம்மை விடுவித்துள்ளார்” என்று கூறினான். ”இளைஞன் அப்சலோம் நலமா? என்று அரசர் வினவ, கூசியன், ”என் தலைவராம் அரசரின் எதிரிகளும் உனக்கு எதிராக தீங்கிழைக்க எழுந்துள்ள அனைவரும், அந்த இளைஞனைப் போல் ஆவார்களாக! என்றான். அப்போது அவர் அதிர்ச்சியுற்று, ”என்மகன் அப்சலோமே! என் மகனே! என் மகன் அப்சலோமே! உனக்கு பதில் நான் இறந்திருக்கலாமே! அப்சலோமே! என்மகனே!” என்று கதறிக் கொண்டே அவர் வாயிலின் மாடியறைக்குச் சென்றார். அரசர் தம் மகனுக்காக அழுது புலம்புவதாக யோவாபுக்கு அறிவிக்கப்பட்டது. ”அரசர் தம் மகனுக்காக வருந்துகிறார்” என்று வீரர்கள் அனைவரும் கேள்விப்பட்டதால் அன்றைய வெற்றி அனைவருக்குமே ஒரு துக்கமாயிற்று. போரிலிருந்து புறமுதுகு காட்டி வெட்கத்தோடு ஓடுபவர்களைப் போன்று அன்று வீரர்கள் நதருக்குள் யாருமறியாமல் நுழைந்தார்கள்.

**பதில்பாடல் :** ஆண்டவரே எனக்குச் செவிசாய்த்துப் பதிலளியும்.

### நற்செய்தி : மாற்கு 5 : 21 - 43

அக்காலத்தில் இயேசு படகேறி, கடலைக் கடந்து மீண்டும் மறு கரையை அடைந்ததும் பெருந்திரளான மக்கள் அவரிடம் வந்து கூடினர். அவர் கடற்கரையில் இருந்தார். தொழுகைக் கூடத் தலைவர்களுள் ஒருவரான யாயிர் என்பவர் வந்து, அவரைக் கண்டு அவரது காலில் விழுந்து, ”என் மகள் சாகுந்தறுவாயில் இருக்கிறாள். நீர் வந்து அவள்மீது உம் கைகளை வையும். அப்போது அவள் நலம் பெற்றுப் பிழைத்துக்கொள்வாள்” என்று அவரை வருந்தி வேண்டினார். இயேசுவும் அவருடன் சென்றார். பெருந்திரளான மக்கள் அவரை நெருக்கிக் கொண்டே பின் தொடர்ந்தனர். அப்போது பன்னிரு ஆண்டுகளாய் இரத்தப் போக்கினால் வருந்திய பெண் ஒருவர் அங்கு இருந்தார். அவர் மருத்துவர் பலரிடம் தமக்கு உள்ளதெல்லாம் செலவழித்தும் ஒரு பயனும் அடையாமல் மிகவும் துன்பப்பட்டவர். அவர் நிலைமை வர வர மிகவும் கேடுற்றது. அவர் இயேசுவைப்பற்றிக் கேள்விப்பட்டு மக்கள் கூட்டத்துக்கிடையில் அவருக்குப் பின்னால் வந்து அவரது மேலுடையைத் தொட்டார். ஏனெனில், ”நான் அவருடைய ஆடையைத் தொட்டாலே நலம் பெறுவேன்” என்று அப்பெண் எண்ணிக் கொண்டார். தொட்ட உடனே அவருடைய இரத்தப் போக்கு நின்று போயிற்று. அவரும் தம் நோய் நீங்கி, நலம் பெற்றதைத் தம் உடலில் உணர்ந்தார். உடனே இயேசு தம்மிடமிருந்து வல்லமை வெளியேறியதைத் தம்முள் உணர்ந்து மக்கள் கூட்டத்தைத் திரும்பிப் பார்த்து, ”என் மேலுடையைத் தொட்டவர் யார்?” என்று கேட்டார். அதற்கு அவருடைய சீடர்கள் அவரிடம், ”இம்மக்கள் கூட்டம் உம்மைச் சூழ்ந்து நெருக்குவதைக் கண்டும், ”என்னைத் தொட்டவர் யார்?” என்கிறீரே!” என்றார்கள். ஆனால் அவர் தம் மேலுடையைத் தொட்டவரைக் காணும்படி சுற்றிலும் திரும்பிப் பார்த்துக் கொண்டிருந்தார். அப்போது அப்பெண் தமக்கு நேர்ந்ததை அறிந்தவராய், அஞ்சி நடுங்கிக்கொண்டு, அவர்முன் வந்து விழுந்து, நிகழ்ந்தது அனைத்தையும் அவரிடம் சொன்னார். இயேசு அவரிடம், ”மகளே, உனது நம்பிக்கை உன்னைக் குணமாக்கிற்று. அமைதியுடன் போ. நீ நோய் நீங்கி நலமாயிரு” என்றார். அவர் தொடர்ந்து பேசிக்கொண்டிருந்தபோது, தொழுகைக் கூடத் தலைவருடைய வீட்டிலிருந்து ஆள்கள் வந்து, அவரிடம், ”உம்முடைய மகள் இறந்துவிட்டாள். போதகரை ஏன் இன்னும் தொந்தரவு செய்கிறீர்?” என்றார்கள். அவர்கள் சொன்னது இயேசுவின் காதில் விழுந்ததும், அவர் தொழுகைக்கூடத் தலைவரிடம், ”அஞ்சாதீர், நம்பிக்கையை மட்டும் விடாதீர்” என்று கூறினார். அவர் பேதுரு, யாக்கோபு, யாக்கோபின் சகோதரரான யோவான் ஆகியோரைத் தவிர வேறொருவரையும் தம்முடன் வரவிடவில்லை. அவர்கள் தொழுகைக் கூடத் தலைவரின் வீட்டிற்குச் சென்றார்கள். அங்கே அமளியையும் மக்கள் அழுது ஓலமிட்டுப் புலம்புவதையும் இயேசு கண்டார். அவர் உள்ளே சென்று, ”ஏன் இந்த அமளி? ஏன் இந்த அழுகை? சிறுமி இறக்கவில்லை, உறங்குகிறாள்” என்றார். அவர்கள் அவரைப் பார்த்து நகைத்தார்கள். ஆனால் அவர் அனைவரையும் வெளியேற்றியபின், சிறுமியின் தந்தையையும் தாயையும் தம்முடன் இருந்தவர்களையும் கூட்டிக் கொண்டு, அச்சிறுமி இருந்த இடத்திற்குச் சென்றார். சிறுமியின் கையைப் பிடித்து அவளிடம், ”தலித்தா கூம்” என்றார். அதற்கு, ”சிறுமி, உனக்குச் சொல்லுகிறேன், எழுந்திடு” என்பது பொருள். உடனே அச்சிறுமி எழுந்து நடந்தாள். அவள் பன்னிரண்டு வயது ஆனவள். மக்கள் பெரிதும் மலைத்துப்போய் மெய்ம்மறந்து நின்றார்கள். ”இதை யாருக்கும் தெரிவிக்கக் கூடாது” என்று அவர் அவர்களுக்குக் கண்டிப்பாய்க் கட்டளையிட்டார் அவளுக்கு உணவு கொடுக்கவும் சொன்னார்.

**தியானம் :** பாவங்கள், சாபத்தின் விளைவாக மனிதன் கட்டிக்கொண்ட அனைத்து நோய்களுக்கும், சாபக்கட்டுகளுக்கும் விடை இயேசுவின் பிரசன்னத்தில் இருக்கிறது. “தந்தை தாம் வாழ்வின் ஊற்றாய் இருப்பது போல மகனும் வாழ்வின் ஊற்றாய் இருக்குமாறு செய்துள்ளார்.”(யோவா.5:26) இயேசுவை நமது வாழ்வின் வழியாக, ஒளியாக நாம் ஏற்றுக்கொள்ளும்போது நம்மிடம் இருக்கும் குறைகள், நோய் நொடிகள், தீய சக்திகளின் தாக்குதல்கள் யாவுமே மறைந்துபோகின்றது. பாவத்தின் சம்பளம் மரணம் (உரோ.6:23) என்பதை இன்றைய முதல் வாசகம் நமக்கு எடுத்துக் கூறுகின்றது. உலகத்தின் பார்வையில் மிகவும் புத்திசாலித்தனமாக செயல்பட்டு, தனது திறமையால் பிறரை ஏமாற்றி, அதிகாரத்தைப் பறித்துக் கொள்ளும்போது, குற்றமற்ற, மாசற்ற மனிதரின் இரத்தத்தை சிந்தும் போது அதற்கான கூலியான மரணத்தை நாம் அடைந்தே தீருவோம். பிறரை ஏமாற்றி வஞ்சித்து நாம் சம்பாதிக்கும் பணம், பதவி, பட்டம் நமக்கு பாவத்தையும், சாபத்தையும் கொண்டுவந்து நமது குடும்பத்தில் சமாதானம், மகிழ்ச்சி, நிறைவு போன்றவற்றை மரணிக்கச் செய்துவிடும். பாவம் இறைவனுடைய பிரசன்னத்தை நம்மிடமிருந்து நீக்கிவிடும். ஆதாம் பாவம் செய்ததன் விளைவாக ஆண்டவரின் பிரசன்னத்திலிருந்து தன்னை மறைத்துக்கொண்டான். (தொநூ.3:8) இதன் விளைவாக சாவு அவனுடைய வாழ்க்கையில் நுழைந்தது. அதைப்போல நம்முடைய பாவங்களே நம்முடைய நோய்களுக்கும் வேதனைகளுக்கும் காரணம். எனவே “உங்கள் பாவங்கள் போக்கப்படும் பொருட்டு மனம்மாறி இயேசுவிடம் திரும்புங்கள்”(தி.ப.3:19). இயேசுவின் மீது கொண்ட நம்பிக்கை நமது வாழ்வை தூய்மைப்படுத்தி நம்மை நோயிலிருந்தும் சாத்தானின் கொடுமைகளிலிருந்தும் விடுவிக்கட்டும். இயேசுவின் பிரசன்னமே நமது வாழ்க்கையின் சிக்கல்களுக்கான பதில். இயேசுவின் மீது கொண்ட நம்பிக்கையே நமது வாழ்வுக்கான வழி. இயேசுவின் வார்த்தைகளே நம்மைக் குணப்படுத்தும் மருந்து என்பதை உணர்ந்து இயேசுவை நமது வாழ்க்கையின் பகுதியாக மாற்றுவோம்! சாபங்களை, நோய்களை முறியடிப்போம்!